# புதுச்சேரி நகராட்சி
# வருவாய் பிரிவு - 2
*******

எண்.550/பு.ந/வ.அ.2/அ.5/2019 தேதி: 07.06.2019

**<u>மின்னணு ஏல அறிவிப்பு (e-Auction notice)</u>**

புதுச்சேரி நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் இனங்களுக்கு உபயோகிப்பாளர்களிடம் நகராட்சி சார்பில் (கட்டணம் வசூலிப்பதற்கான) உரிமம் வழங்குவதற்காக ஒவ்வொரு இடத்திற்கும் **01.07.2019 முதல் 31.03.2020** வரையிலான காலத்திற்கு உரிமம் வழங்கும்பொருட்டு மின்னணு_ஏலம் வருகின்ற 20.06.2019 **(வியாழக் கிழமை)** காலை **11.00** மணி முதல் பிற்பகல் **5.00** மணி வரை **www.auctionindia.com** என்ற வலைதளத்தின் இணையதளம் மூலம் நடைபெற உள்ளது.

| வ. எண் | ஏலம் விடப்படும் உரிமங்களின் விபரம்<br>இனம் / இடம் / தன்மை | குறைந்தபட்ச ஏலத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | புதுச்சேரி நகராட்சி ராஜீவ் காந்தி பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் | 2,65,250/ | 2,38,730 |
| 2. | புதுச்சேரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில்(பிரதானம்) எந்திரத்தின் மூலம் தனியார் எடை பார்பதற்கு வசூல் செய்தல். | 8,310/- | 7,480 |
| 3. | புதுச்சேரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் (இணைப்பு பகுதியில்) எந்திரத்தின் மூலம் தனிநபர் எடை பார்ப்பதற்கு வசூல் செய்தல். | 9,810/- | 8,830 |
| 4. | புதுச்சேரி நகராட்சி ராஜீவ் காந்தி புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் (பிரதானம் மற்றும் இணைப்பு) | 3,32,060/- | 2,98,850 |
| 5. | கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா அருகில் உள்ள கட்டண கழிப்பிடம் | 24,740/- | 22,270 |
| 6. | புதுச்சேரி நகராட்சி குபேர் அங்காடியில் (பெரிய மார்கெட்) அமைந்துள்ள கட்டண கழிப்பிடம் | 63,450/- | 57,110 |
| 7. | புதுச்சேரி நகராட்சியால் புதியதாக சீரமைக்கப்பட்ட கடற்கரை அடிக்காசு வியாபாரிகள் மறுவாழ்வு மையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் | 17,410/- | 15,670 |

| | | | |
|---|---|---|---|
| 8. | புதுச்சேரி நகராட்சி முதலியார்பேட்டை அங்காடி மற்றும் அதைச்சார்ந்த பகுதிகளின் அடிக்காசு வசூல்.<br><br>**அடிக்காசு வசூல் செய்யப்பட வேண்டிய எல்லை பகுதிகள்:**<br><br>(டாக்டர் அம்பேத்கர் சாலை, சுப்பையா சாலை, மறைமலை அடிகள் சாலை (வெங்கடசுப்பா ரெட்டியார் சிலை வரை கடலூர் ரோடு ரயில்வே டிராக் வரை அங்கிருந்து 100 அடி சாலை) ரயில்வே மேம்பாலம் வரை மற்றும் தெற்குப் பகுதியில் புதுச்சேரி நகராட்சி எல்லைக்குஉட்பட்ட அனைத்து பகுதிகள்.) | 32,320/- | 29,090 |
| 9. | நெல்லித்தோப்பு அங்காடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அடிக்காசு வசூல்<br><br>**அடிக்காசு வசூல் செய்யப்பட வேண்டிய எல்லை பகுதிகள்**<br><br>மறைமலை அடிகள் சாலை, புவன்கரே வீதி, வெங்கட சுப்பையா சாலை முதல் ரயில்வே லைன் வரை அங்கிருந்து கடலூர் ரோடு வெங்கடசுப்பா ரெட்டியர் சிலை வரை உள்ள சாலைகளுக்கு உட்பட்ட பகுதிகள்,**(நெல்லித்தோப்பு மார்கெட் உட்பகுதி நீங்கலாக**) | 12,210 | 10,990 |
| 10. | புதுச்சேரி நகராட்சி சாரம், (மகாத்மா காந்தி) அங்காடி அதைச்சார்ந்த பகுதிகளின் அடிக்காசு வசூல்.<br><br>**அடிக்காசு வசூல் செய்யப்பட வேண்டிய எல்லை பகுதிகள்**<br><br>100 அடி ரோடு : இந்திராகாந்தி சிலையிலிருந்து ராஜீவ்காந்தி சிலை வரை, மறைமலை அடிகள் சாலை முதல் அண்ணா சிலை வரை (வடக்கு பகுதி) அண்ணா சாலை முதல் காமராஜ் சிலை வரை (மேற்கு பகுதி) மற்றும் மறைமலை அடிகல் சாலை ராஜீவ்காந்தி சிலை வரை ஆகிய எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகள்.**(சாரம் மார்கெட் உட்பகுதி மற்றும் புதிய பேருந்து நிலையம் நீங்கலாக**) | 12,000/- | 10,800 |
| 11. | முத்தியால்பேட்டை மற்றும் ராவுத்தான்குப்பம் அங்காடி அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கான அடிக்காசு வசூல்.<br><br>**அடிக்காசு வசூல் செய்யப்பட வேண்டிய எல்லை பகுதிகள்.**<br><br>சர்தார் வல்லபாய்பட்டேல் சாலை, பழைய சாராய ஆலை குடியிருப்பு முதல் அண்ணா சாலை மற்றும் குமரகுருபள்ளம் ரோடு வரை உள்ள புதுச்சேரி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட வடக்கு பகுதிகள் அனைத்தும்.**(முத்தியால்பேட் மார்கெட் நீங்கலாக)** | 10,000/- | 9,000 |
| 12. | கடற்கரை சாலை பழைய சாராய ஆலை எதிரில் உள்ள கட்டண கழிப்பிடம் | 20,900/- | 18,810 |

| | | | |
|---|---|---|---|
| 13. | சின்னக்கடை (ஜனாப் காசிம்) நகராட்சி அங்காடி மற்றும் செஞ்சி சாலை அங்காடி அதைச்சார்ந்த பகுதிகளில் அடிக்காசு வசூல்<br><br>**அடிக்காசு வசூல் செய்யப்பட வேண்டிய பகுதிகள்**<br><br>சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை அண்ணா சாலை, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலைகளுக்கு உட்பட்ட பகுதிகள். **(குபேர் அங்காடி உட்பகுதி, அதனை சுற்றி உள்ள சாலைகள் மற்றும் சண்டே மார்கெட் நீங்கலாக)** | 44,210/- | 39,790 |
| 14. | கடலூர் சாலை புரோவிடன்ஸ் மால் எதிரில் உள்ள சிங்கார வேலர் திடலில் மிதி வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்துவதற்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1,30,500/ | 1,17,450 |
| 15. | ராஜீவ்காந்தி புதிய பேருந்து நிலையத்தில் (கிழக்கு மற்றும் மேற்கு) பகுதிகளில் மிதி வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் நிறுத்துவதற்கான கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,95,250/- | 1,75,730 |
| 16. | புதுச்சேரி நகராட்சி தூய்மா வீதி, மாஹே லபோர்தெனே வீதி சந்திப்பில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பிடம் | 15,000/- | 13,500 |

**2.** இந்த ஏலம் இந்நகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட சேவையாளர் **(M/s. TVS Electronic Ltd.)** மூலமாக **"www.auctionindia.com"** என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலமாக நடைபெறும். ஆன்லைன் ஏல நிபந்தனைகள் மற்றும் பொது கட்டுப்பாடுகள் ஆகியவை அடங்கிய ஏல விவரங்களை **"www.auctionindia.com"** என்ற இணையதளத்தில் பெறலாம்.

**3.** மின்னணு ஏல அறிவிப்பின் இதர விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கீழ்க்கண்ட இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இணையதள முகவரி **"www.py.gov.in.**

**4.** ஏலம் எடுக்க விரும்புவோர் அதற்கான விண்ணப்பப்படிவங்களை எண்:1, சுய்ப்ரேன் **சாலையில் உள்ள** வர்த்தக சபையில் **(மேல்மாடியில்) இயங்கிவரும் நகராட்சி வருவாய் பிரிவு-2-ல் அனைத்து வேலை நாட்களிலும் வரும் 10.06.2019** முதல் **17.06.2019 அன்று மாலை 5.00 மணிவரை ரூ.100/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.**

...3/-

**5.** ஏலத்தில் பங்குபெற விரும்புவோர் **18.06.2019** மாலை **5.45** மணிக்குள் செலுத்தப்பட வேண்டிய முன்வைப்புத்தொகை **(EMD)** மற்றும் நகராட்சியின் வருவாய் பிரிவு-1/ வருவாய் பிரிவு-2-ல் மூலம் பெறப்பட்ட வரிபாக்கி இல்லை என்ற சான்றிதழ்களை இந்நகராட்சி வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏலம் இண்டெர்நெட் மூலம் நடைபெறுவதால் ஏலம் கேட்க நுழைவதற்கான பதிவுப்பெயர் (User Name), ரகசியசொல் (Password) ஆகியவற்றையும் ஏலத் தேதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளவேண்டும்.

**6.** ஏல நிபந்தனைகளின் விபரம் குறைந்தபட்ச ஏலத்தொகை மற்றும் செலுத்த வேண்டிய **முவைப்புத்தொகை விவரங்கள்** விண்ணப்ப படிவத்தோடு வழங்கப்படுவதுடன் **எண்:1, சுய்ப்ரேன் சாலையில் உள்ள வர்த்தக சபை** மேல்மாடியில் இயங்கிவரும் நகராட்சியின் வருவாய் பிரிவு-2 அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டுள்ளது.

**7.** மேலும், விவரங்கள் வேண்டுவோர் புதுச்சேரி நகராட்சி, வருவாய் பிரிவு-2 அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**(அர்ஜீன் ராமகிருஷ்ணன்)**
**ஆணையர்**